சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவண்ணாமலை மாவட்டம் – பணியிடைக் காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.அ.பாலமுருகன் என்பவரின் மகன் திரு.பா.எழிலரசன் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்தது – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை

அரசாணை (4ப) எண்:17

நாள்: 26.04.2022
சுபகிருது, சித்திரை 13
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.17019/2018/பஅ3, நாள்:29.10.2019.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.38340/2020/டி1, நாள்:06.10.2021.

*****

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 14.10.2018 அன்று காலமான திரு.அ.பாலமுருகன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.பா.எழிலரசன் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 08.01.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.அ.பாலமுருகன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண் பருவத்தினை 31.12.1999 பிற்பகல் அன்று நிறைவு செய்துள்ளார்

த.பி.பா.

Scanned with CamScanner

என்றும், அவரது மகன் திரு.பா.எழிலரசன் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி 14.12.2018 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், தனியர் திரு.பா.எழிலரசன் 16.06.2000 அன்று பிறந்துள்ளார் என்றும், மேலும், தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10-ம் வகுப்பு) மார்ச் 2015 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்று ஒருங்கிணைந்த சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசு ஊழியர் இறந்த நாளில் (14.10.2018) தனியரின் வயது 18 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 19 என்றும் தெரிவித்துள்ளார். தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தனியர் 08.01.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.பா.எழிலரசன் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 08.01.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.6174/ட்டி1/2021, நாள் 05.04.2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.400/ஜி3/2022-1, நாள்:08.04.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா

அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.

மாநிலக் கணக்காயர், சென்னை - 18.

கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15.

மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.

த.பி.பா.

Scanned with CamScanner

நகல்:

திரு.பா.எழிலரசன், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருவண்ணாமலை மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9,
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9,
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சே.சாந்தி 27/04/2022
பிரிவு அலுவலர்

ந.க.எண். 17019/2018/பஅ3

மாவட்ட ஆட்சியரகம்
வளர்ச்சி பிரிவு,
திருவண்ணாமலை
நாள் 26-05-2022

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
திருவண்ணாமலை.

பெறுநர்.
திரு.பா.எழிலரசன்,
ஊர்நல அலுவலர் நிலை-2,
பெரணமல்லூர் வட்டாரம் - உரிய வழிமுறையாக

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ),
பெரணமல்லூர் வட்டாரம்

நகல்: "பஅ3" பிரிவு இருப்புக்கோப்பு

ந.க. வஅ1/290/2022

ஊ.ஒ. பெரணமல்லூர்.
நாள்: .06.2022

அனுப்பப்படுகிறது.

**BLOCK DEVELOPMENT OFFICER (V.PT)**
**PERANAMALLUR**

பெறுதல்
பா.எழிலரசன்,
ஊ.ந.அ.நிலை-2
ஊ.ஒ.பெரணமல்லூர்
13/6/2022

Scanned with CamScanner